பக்கங்கள்:-18

காலை முரசு

## குற்றம் நடந்தேறிய இடமாகவே காணப்படுகின்றது செம்மணி

(விரிவான செய்தி 3ஆம் பக்கம்)



முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆனி 24 | செவ்வாய்க்கிழமை | 08.07.2025 | அதிர்வு 338





# செம்மணியில் நேற்று ஐந்து எலும்புக்கூடுகள்

### பிளாஸ்டிக் மாலை, ஆடைகள், நாணயக் குற்றிகள் என்பனவும் அடையாளம்

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றைய அகழ்வின் போது 5 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் படி செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 52 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. 06

# எலும்பு எச்சங்கள் காணப்பட்டதையடுத்து கால்வாய் அமைக்கும் நடவடிக்கை நிறுத்தம்

### புதிய பகுதியில் அகழ்வுப் பணி தொடர்கின்றது



(பிரபாகரன் டிலக்சன்)

செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வு இடம்பெறும் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுகிழமை ஜே.சி.பி. இயந்திரத்தின் மூலம் தற்காலிக கால்வாய் அமைக்கும் பணிகள் இடம்பெற்ற நிலையில் மூன்று இடங்களில் மனித என்பு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து கால்வாய் அமைக்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது.

மேலும் புதிய புதைகுழி இருக்கலாம் எனச் சந்தேகத்தின் அடிப்படையில் தோண்டப்பட்ட குழிகளிலும் மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியில் இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 06




சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்கும் படி பொலிஸார் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் தொடர்பில் வெறுமனே செயல்பாட்டு ரீதியாக – இயந்திரத்தனமாக – செயல்படாமல், நியாயமான முடிவுகளை எடுக்க வேண்டியது அவசியம். அது குறித்து நீதிவான்களுக்குப் பாடம் போதிக்க வேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டிருப்பதாக உயர் நீதிமன்றம் கூறியிருக்கின்றது.

அதாவது சந்தேக நபர்கள் மற்றும் கைதிகளை விளக்க மறியலில் வைப்பது தொடர்பாக நீதிவான்களுக்கு சரியாகப் பாடம் படிப்பிக்க வேண்டி இருக்கின்றது என்பதை உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டி இருக்கின்றது.

அதுவும் மூத்த நீதியரசர்களின் ஒருவரான யஸந்த கோத்தாகொட வழங்கிய தீர்ப்புக்கு, பிரதம நீதியரசர் முர்து பெர்னான்டோ மற்றும் எஸ் துரைராஜா ஆகியோர் இணக்கம் தெரிவித்த ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

காட்டு யானைகள் தங்கள் 06

# செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று நடைபெற்ற அகழ்வுப் பணி

(படங்கள்:- பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)











# குற்றம் நடந்தேறிய இடமாகவே காணப்படுகின்றது செம்மணி

## நேற்று புதைகுழி அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையான சிரேஷ்ட சட்டத்தரணி கருத்து



(பிரபாகரன் டிலக்சன்)

"செம்மணிப் புதைகுழியில் சிறுவர்களின் என்புத் தொகுதிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. சிறுவர்களை எந்த விதத்திலும் குற்றவாளிகளாகவோ – குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களாகவோ கருத முடியாது. எனவே, நிச்சயமாக குற்றம் நடைபெற்ற இடமாகவே இந்த செம்மணிப் புதைகுழி காணப்படுகின்றது."

– இவ்வாறு சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல் தெரிவித்தார்.

யாழ். செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் நேற்று அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையானார். இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"செம்மணிப் புதைகுழியில் 12ஆம் நாள் அகழ்வுப் பணி இடம்பெற்றுள்ளது. மேலும் புதைகுழிகள் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்ட புதிய பகுதிகளிலும் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

கண்டுபிடிக்கப்பட்ட என்புத் தொகுதிகள் நில மட்டத்தில் இருந்து 1/12 அடி தொடக்கம் 2 அடி ஆழத்திலேயே புதைக்கப்படிருக்கின்றன. இது சடலங்களைச் சாதாரணமாக மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்ட இடமாகத் தெரியவில்லை. மாறாகச் சடலங்கள் சடுதியாகப் புதைக்கப்பட்ட இடம் போல் காணப்படுகின்றது.

சிறுவர்களின் என்புத் தொகுதிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. இது மிகப் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்திருக்கின்றது. சிறுவர்களை எந்தவிதத்திலும் குற்றவாளிகளாகவோ – குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களாகவோ கருத முடியாது. எனவே, நிச்சயமாக குற்றம் நடைபெற்ற இடமாகவே இந்தப் புதைகுழி காணப்படுகின்றது.

இந்த விடயத்தில் மிகவும் அக்கறையுடன் ஆய்வாளர்கள் செயற்பட்டு வருகிறார்கள். தினமும் கண்டெடுக்கப்படும் விடயங்கள் உத்தியோகபூர்வமாக ஊடகங்களுக்கு அறிவிக்கப்படுகின்றன. அகழ்ந்தெடுக்கப்படும் என்புத் தொகுதிகள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. அகழ்வுப் பணிகள் சுமுகமாக இடம்பெறுகின்றன. அகழ்வுப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற அனைவரினதும் ஒத்துழைப்பும் தேவை." – என்றார்




# ஹர்ஷணவின் வெற்றிடத்திற்கு நிஷாந்த ஜயவீரவின் பெயர்

## வர்த்தமானியில் வெளியீடு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான கலாநிதி ஹர்ஷண சூரியப்பெருமவின் இராஜினாமாவைத் தொடர்ந்து ஏற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடத்தை நிரப்ப நிஷாந்த ஜயவீரவின் பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையம் குறித்த வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் செயலாளர் இந்தப் பெயரை தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பியுள்ளார். அதன்படி, வெற்றிடமாக உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு நிஷாந்த ஜயவீரவின் பெயரை வர்த்தமானியில் வெளியிட தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

கலாநிதி ஹர்ஷண சூரியப்பெரும நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சராகப் பணியாற்றினார், பின்னர் தனது பதவியிலிருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் இராஜினாமா செய்தார்.

நிதி அமைச்சின் செயலாளர் பதவியை ஏற்றுக்கொள்வதற்காக அவர் இவ்வாறு இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை அரசின் படுகொலைகளை அந்த அரசே விசாரிப்பது ஏற்புடையதல்ல

## மாற்றான் தாய் மனநிலையுடன் தமிழர்களைக் கையாளாதீர் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துக்குச் சிறீதரன் பதிலடி

உள்ளக விவகாரத்தில் சர்வதேசத் தலையீடு தேவையில்லை எனக் கூறுவதன் ஊடாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இது சிங்கள பௌத்த நாடு என்பதை மீள வலியுறுத்துவதுடன் தமிழர்களை மாற்றான் தாய் மனநிலையுடன் கையாள்கின்றார் எனவும் சுட்டிக்காட்டிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி., இலங்கை அரசால் நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் தொடர்பில் இலங்கை அரசே விசாரணைகள் முன்னெடுப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கடந்த வாரம் சிங்களச் செய்திச் சேவை ஒன்றுக்கு அளித்திருந்த நேர்காணலில், நாட்டின் உள்ளக விவகாரங்களில் சர்வதேசத் தலையீடுகள் அவசியமற்றவை எனவும், அரசமைப்பு, சட்டம் மற்றும் நீதிமன்றக் கட்டமைப்புக்கள் ஊடாக பல்வேறு உள்ளகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் எனவும் தெரிவித்திருந்தார்.

அதுமாத்திரமன்றி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கின் அண்மைய இலங்கை விஜயமும், அவரது அவதானிப்புக்களும் எதிர்வரும் செப்டெம்பர் மாதக் கூட்டத் தொடரில் இலங்கைக்குச் சாதகமாக அமையும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

இது குறித்து கருத்துரைத்த சிறீதரன் எம்.பி., இலங்கை இராணுவத்தினரைச் சர்வதேச அரங்கில் நிறுத்தமாட்டோம் எனவும், உள்ளக விவகாரத்தில் சர்வதேசத் தலையீடு தேவையில்லை எனவும் கூறுவதன் ஊடாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இது சிங்கள பௌத்த நாடு என்பதை மீள வலியுறுத்துவதுடன் தமிழர்களை மாற்றான் தாய் மனநிலையுடன் கையாள்கிறார் என விசனம் வெளியிட்டார்.

அதேவேளை நாட்டின் வெளிவிவகார அமைச்சர் என்ற ரீதியில் தனது பதவியைத் தக்கவைத்துக்கொள்வதற்காகவும், சர்வதேசத்தின் மத்தியில் நாட்டைக் காப்பாற்றுவதற்காகவும் விஜித ஹேரத் அவ்வாறு பேசுவதாகக் குறிப்பிட்ட



சிறீதரன் எம்.பி., இருப்பினும் மீறல்களாலும் தொடர்ச்சியான ஒடுக்குமுறைகளாலும் பாதிக்கப்பட்ட தரப்பான தமிழர்கள் அவரது கருத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2015 ஆம் ஆண்டு இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிராகரிக்கும் தற்போதைய அரசால் உள்ளகப் பொறிமுறை ஊடாக எவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியைப் பெற்றுத் தர முடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

மேலும் பாதிக்கப்பட்ட தரப்பினர்தான் தமது தேவை என்னவென்பதைக் கூற வேண்டும் எனக் குறிப்பிட்ட சிறீதரன் எம்.பி., இலங்கை அரசால் நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் தொடர்பில் இலங்கை அரசே விசாரணைகளை முன்னெடுப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

# குருவிட்ட யுவதி படுகொலை; வெளியாகும் பகீர் தகவல்கள்

இரத்தினபுரி, குருவிட்ட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தெவிபஹல – தொடன்எல்ல வீதியில் கழுத்து அறுக்கப்பட்டு யுவதி ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் 17 வயதுடைய சிறுவன் ஒருவன் குருவிட்ட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருவிட்ட, தெவிபஹல – தொடன்எல்ல வீதியில் கடந்த புதன்கிழமை மாலை இனந்தெரியாத நபர் ஒருவர் யுவதி ஒருவரின் கழுத்தை வெட்டி அவரது கழுத்தில் இருந்த தங்க மாலையைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

படுகாயமடைந்த யுவதி இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் குருவிட்ட – தெவிபஹல பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய யுவதி ஆவார்.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் கடந்த வியாழக்கிழமை குருவிட்ட பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த 17 வயதுடைய சிறுவன் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சிறுவனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், யுவதியின் கழுத்தை வெட்டி தங்க மாலையைக் கொள்ளையிட்டுச் சென்ற சந்தேகநபர் மேற்படி சிறுவன் எனத் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சிறுவனிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில், சிறுவன் கொலை செய்யப்பட்ட யுவதியை நீண்ட நாட்களாகக் காதலித்து வந்துள்ள நிலையில் அதற்கு அந்த யுவதி மறுப்புத் தெரிவித்துள்ளார்.



சம்பவ தினத்தன்று யுவதி வீதியில் பயணித்துக்கொண்டிருந்த வேளையில் சிறுவன், யுவதியை வழிமறித்துத் தன்னைக் காதலிக்குமாறு கோரியுள்ளார்.

ஆனால், யுவதி மீண்டும் மறுப்புத் தெரிவித்ததால் சிறுவனுக்கும் யுவதிக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

தகராறின் போது சிறுவன், யுவதியின் கழுத்தை வெட்டி அவரது தங்க மாலையைக் கொள்ளையிட்டுச் சென்றதாகப் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இதனையடுத்துக் கைது செய்யப்பட்ட சிறுவன் கடந்த வெள்ளிக்கிழமை இரத்தினபுரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.










# நாட்டில் இலவச சுகாதார சேவையில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

நாட்டின் இலவச சுகாதார சேவையில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பிலியந்தலை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு, உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரச மருத்துவமனைகளில் மருந்துச் சீட்டுகள் வழங்கப்பட்டாலும், மக்கள் தனியார் மருந்தகங்களில் மருந்துகளை வாங்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

எனவே, அது உண்மையான இலவச சுகாதாரம் அல்ல. தேசிய மருத்துவமனைகளில் உள்ள 4 எம்.ஆர்.ஐ. ஸ்கேனர்களில் 3 ஸ்கேன் இயந்திரங்கள் செயலிழந்துள்ளன.

இருதய நோயாளிகளுக்கான மருத்துவமனைகளில், மருந்துகள் மற்றும் பிற பொருட்களைப் பெறுவதற்கு ஒரு லட்சம் ரூபாவுக்கும் மேல் மேலதிகமாக செலவிட வேண்டியுள்ளது.

நுண்ணுயிர் எதிர்ப்பிகள், மயக்க மருந்துகள் மற்றும் வலி நிவாரணிகளுக்குக் கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்த மருந்துகளுக்குத் தனியார் மருந்தகங்களிலும் தட்டுப்பாடு நிலவுகிறது.

எனவே, இலவச சுகாதாரம் என்ற வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் இலவசமான ஒன்றாகவே அமைய வேண்டும். அதனைச் செயற்படுத்துவது அரசின் பொறுப்பாகும்.” என்றார்.






## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிராமங்கள் மற்றும் வயல்களின் மீது படையெடுப்பதைத் தடுப்பதில் அதிகாரிகள் அசிரத்தையாக இருக்கிறார்கள் என்று தெரிவித்து, ஒரு கிராம மக்கள் நடத்திய போராட்டம் தொடர்பில் கைது செய்யப்பட்ட நபர்களை விளக்கமறியலில் வைக்கும்படி பொலன்னறுவை நீதிவான் உத்தரவிட்டிருந்தார். அதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவின் மீதான தீர்ப்பிலேயே உயர் நீதிமன்ற ஆயம் இப்படி நீதிவான்களுக்குப் பிணை வழங்குவது தொடர்பில் சரியாகப் பாடம் படிப்பிக்கப்பட வேண்டும் என்று கருத்துக் கூறி இருக்கிறது.

"ஒரு நீதிவான் பிணை வழங்க மறுத்து சந்தேக நபரை தடுப்புக் காவலில் வைப்பது சட்டபூர்வமானது என்றாலும், பொலிஸாரின் வெறும் வேண்டுகோளுக்காக அல்லாமல், மாறாக குற்றவியல் நீதியின் நோக்கங்களுடன் ஒத்துப்போகும் செல்லுபடியாகும் காரணங்களுக்காக அவர் அவ்வாறு செய்ய வேண்டும். நீதித்துறையும் மக்களின் அடிப்படை உரிமைகளை நிலைநிறுத்தக் கடமைப்பட்டுள்ளது என்பதையும், சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட செல்லுபடியாகும் காரணங்களுக்காக விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே அத்தகைய உரிமைகளைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தும் உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டும் என்பதையும், சட்டத்தால் வழங்கப்பட்ட முறையில் அத்தகைய முடிவுகளை எடுக்க வேண்டும் என்பதையும் நீதிவான்கள் நன்கு அறிந்திருக்க வேண்டும்" என்று அந்த ஆயம் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

நீதிவான்களைப் போதிக்கும் நிறுவனம் இந்தத் தீர்ப்பில் உள்ள கொள்கைகள் குறித்து நீதிவான்களுக்குக் கற்பிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் உயர் நீதிமன்றம் மேலும் தெரிவித்துள்ளது.

இனி, நாட்டில் உள்ள பல நீதிவான் நீதிமன்றங்களில் பிணை வழங்கக் கோரும் சமர்ப்பணங்களில் இந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பு பரவலாக மேற்கோளாகக் காட்டப்பட்டு, வாதங்கள் முன்னெடுக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

* * *

இலங்கை சிவில் நிர்வாக சேவையில் பெரிதும் மதிக்கப்பட்ட பிரட்மன் வீரக்கோன் தம்முடைய 94 ஆவது வயதில் காலமானார்.

நாட்டின் தெரிவு செய்யப்பட்ட ஏழு பிரதமர்களின் கீழும், இரண்டு ஜனாதிபதிகளின் கீழும் முக்கிய சிவில் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றிய பெருமையை ஈட்டியவர் அவர்.

இலங்கை சிவில் நிர்வாக சேவையில் 1954இல் இணைந்த பிரட்மன் வீரக்கோன் ஆரம்பத்தில் அப்போதைய பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலையின் செயலாளராகப் பதவியேற்றார். 1956இல் பண்டாரநாயக்கா பிரதமரான போதும் அந்தப் பதவியில் தொடர்ந்தார். அவரது மறைவுக்கு பின்னர் தஹநாயக்கா மற்றும் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகிய பிரதமர்களின் கீழும் அதே பதவியில் நீடித்தார்.

பின்னர் சிறிதுகாலம் டட்லியின் அரசிலும் அதேபோன்ற பதவியில் அவர் தொடர்ந்தார். ஆயினும் 1970 இல் சிறிமாவோ பண்டாரநாயக்கா பதவியேற்றதும் அவர் மட்டக்களப்பு, அம்பாறை அரச அதிபராக மாற்றப்பட்டார்.

1976 இல் ஓய்வு பெற்ற அவர் பின்னர் அரசு சார்பற்ற நிறுவனங்களில் உயர் பதவியில் பணியாற்றினார்.

எனினும்1977இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன பிரதமராகப் பதவி ஏற்றதும் அவர் முக்கிய அமைச்சு ஒன்றின் செயலாளராக நியமிக்கப்பட்டார். 1980 இல் பிரதமர் ரணசிங்க பிரேமதாஸவின் செயலாளராக அவர் பதவியேற்றார். 1983 இனக் கலவரங்களை அடுத்து அவர் அதிக அதிகாரங்களோடு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமாகவும் பொறுப்பேற்றார்.

ரணசிங்க பிரேமதாஸ ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் அவர் ஜனாதிபதியின் ஆலோசகராக பணியேற்றார்.

2001 இல் ரணில் விக்கிரமசிங்க பிரதமரான போது மீண்டும் பிரதமரின் செயலாளராக நியமிக்கப்பட்ட அவர், அச்சமயத்தில் அந்த அரசு விடுதலை புலிகளோடு நடத்திய சமாதான பேச்சுக்களின் பின்புலத்தில் கணிசமான – மிக முக்கியமான – பங்கை ஆற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## எலும்பு எச்சங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

11 ஆம் நாள் அகழ்வு நேற்றுமுன் தினம் இடம்பெற்றது.

இதன்போது மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்ட பகுதியைச் சூழ உள்ள பகுதிகளில் சிரமதானப் பணிகள் இடம்பெற்றன. மேலும் மனிதப் புதைகுழி அகழ்வு இடம்பெறும் குழிக்குள் மழை நீர் தேங்காது வெளியேறுவதற்கான முன்னேற்பாடாக ஜே.சி.பி. இயந்திரம் மூலம் தற்காலிக கால்வாய் அமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அண்ணளவாக 20 மீற்றர் நீளமுள்ள கால்வாய் வெட்டப்பட்ட நிலையில் மூன்று இடங்களில் மனித என்பு எச்சங்கள் வெளிவந்ததால் கால்வாய் வெட்டும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது.

தற்போது நடைபெறும் அகழ்வுப் பணிகளோடு இதனையும் இணைத்து தொடர்ந்தும் அகழ்வுப் பணிகள் இடம்பெறவுள்ளன.

அத்தோடு, செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிக்கு அருகில் மேலும் புதைகுழிகள் இருக்கலாம் எனச் செய்மதிப் படங்கள் மூலம் சில பகுதிகள் சந்தேகத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டு தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவாவினால் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அந்தப் பகுதிகளில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை மாணவர்கள் மற்றும் நல்லூர் பிரதேச சபையின் பணியாளர்களின் உதவியோடு அகழ்வுப் பணிகள் கடந்த இரண்டாம் திகதி ஆரம்பமாகின.

குறித்த பகுதியில் இடம்பெற்ற அகழ்



வின்போது கடந்த 5ஆம் திகதி மண்டையோடு ஒன்று அடையாளம் காணப்பட்ட நிலையில் நேற்று மேலும் சில மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டு அவை துப்பரவு செய்யப்பட்டு வருகின்றன. அவை தொடர்பான எண்ணிக்கைகள் அறிக்கையிடப்படவில்லை. எதிர்வரும் நாட்களில் அறிக்கையிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறித்த எச்சங்களும் குழப்பகரமாகவே காணப்படுகின்றமையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

குறித்த பகுதியில் இருந்து கடந்த 4ஆம் திகதி சிறுமியின் ஆடை ஒன்றும் அகழ்ந்தெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## செம்மணியில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகளின் 12 ஆம் நாள் அகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்றைய அகழ்வின் போது 5 என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 52 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் இதுவரை 47 என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. மேலும் குழப்பகரமான முறையில் குவியல்களாக இருந்த 4 மனித எச்சங்களும் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

மனிதப் புதைகுழியில் இருந்து பிளாஸ்டிக் மாலை, ஆடைகள், நாணயக் குற்றிகள் என்பனவும் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

யாழ்.நீதிவான்ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் துறைசார் நிபுணரும் பேராசிரியருமான ராஜ் சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சிரேஷ்ட சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல், சட்டத்தரணிகளான ஞா.ரனிதா, வி.கே. நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# கொள்கலன்களுக்கு உரித்துடைய நிறுவனங்களின் பெயர்ப் பட்டியலை மறைக்க அரசாங்கம் முயற்சி

## முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு

"சுங்கத்தில் இருந்து பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்களுக்கு உரித்துடைய நிறுவனங்களின் பெயர்ப் பட்டியலை வெளியிடாமல் இருப்பதன் மூலம் அரசாங்கம் இதனை மறைப்பதற்கு முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் எழுகிறது. அத்துடன் கோட்டாபய அரசாங்கத்தில் வட் வரி குறைத்ததன் மூலம் நாட்டுக்கு ஏற்பட்ட வருமான இழப்புக்கு சமமான இழப்பு, கொள்கலன் விடுவிப்பின் மூலம் ஏற்பட்டுள்ளது."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பரிசோதனையின்றி சுங்கத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ள கொள்கலன்கள் தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்து மௌனம் காத்து வருவது தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தில் வட் வரியை குறைப்பதற்கு எடுத்த தீர்மானம் காரணமாக அரசாங்கத்தின் வருமானம் சுமார் 600 பில்லியன் ரூபா வரை இழந்தது. தங்களுக்கு தேவையான வியாபாரிகளுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கிலேயே இவ்வாறானதொரு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. இறுதியில் நாடு வங்குரோத்து நிலைக்குச் செல்வதற்கு இந்த வட் வரி குறைப்பும் காரணமாக அமைந்தது.

அதேபோன்றே தற்போது இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், கட்டாயமாக பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டிய 309 கொள்கலன்கள் பரிசோதனை செய்யப்படாமல் சுகத்தில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள வருமான இழப்பு தொடர்பில் இதுவரை வெளிவரவில்லை. வட் வரி குறைத்ததால் ஏற்பட்ட வருமான இழப்புக்கு நிகரான இழப்பு இதன் மூலம் ஏற்பட்டிருக்க வேண்டும் என நாங்கள் நம்புகிறோம்.

மேலும், இவ்வாறு விடுவிக்கப்பட்ட கொள்கலன்களில் இருந்த பொருள்கள், அந்த கொள்கலன்கள் உரித்துடைய நிறுவனங்களின் பெயர்ப் பட்டியலை அரசாங்கம் வெளிப்படுத்தாமல் இருந்து வருகிறது. அதனால் அரசாங்கத்தின் ஆலோசனையுடனே இந்த 309 கொள்கலன்களும் விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படியானால் அரசாங்கத்துடன் நெருக்கமான, தேர்தல் காலத்தில் உதவி செய்த நிறுவனங்களின் கொள்கலன்களா என்ற சந்தேகம் எழுகிறது.

அதேநேரம் சில வாரங்களுக்கு முன்னர் சுங்க திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் ஊடக சந்திப்பொன்றை நடத்தி, குறித்த கொள்கலன்களில் இருந்த பொருள்கள் என சில பொருள்களின் பெயர்களை வெளியிட்டிருந்தார். இந்த பொருள்கள் கட்டாயமாக பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டி இருந்த போதும் பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட பொருள்களாகும்.

அதேபோன்று எஸ்.எல்.எஸ். பரிசோதனைக்கு உள்வாங்கப்படவேண்டிய பொருள்களாகும். இந்த பொருட்கள் எஸ்.எல்.எஸ் தரச்சான்றிதழ் பரிசோதனைக்கு உள்வாங்கப்பட்டதா? எஸ்.எல்.எஸ். தரச்சான்றிதழுடனா இந்த பொருள்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றன? யார் இந்த பொறுப்பை ஏற்றுக்கொள்ளப்போகிறார்கள்? தற்போது குறித்த பொருட்கள் அந்த நிறுவனங்களின் களஞ்சியசாலைக்கு சென்றிருக்கலாம். இவ்வாறான நிலையில், எஸ்.எல்.எஸ் தரச்சான்றிதழை பெறுவதற்கு, குறித்த நிறுவனங்கள் உண்மையாகவே அந்த பொருள்களைத்தான் சமர்ப்பிக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

அத்துடன், மருந்துப் பொருள்கள் அந்த கொள்கலன்களில் இருந்ததாக தெரிவிக்கப்பட்டது. அப்படியானால் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் சபையின் அனுமதியுடனா இந்த மருந்துப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன? குறித்த கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டு 6 மாதங்களுக்குப் பின்னரே அரசாங்கம் அந்த கொள்கலன்களில் இருந்த பொருள்களின் பட்டியலை வெளியிட்டது. எனவே, இந்த கொள்கலன்கள் விடுவிப்பு தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்தும் மௌனமாக இருப்பதன் மூலம் இந்த விடயத்தில் பாரிய பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது என்பது தெளிவாகிறது." – என்றார்.

# தேசிய விபத்து விழிப்புணர்வு வாரம் ஆரம்பம் மக்களைத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டங்கள்

தேசிய விபத்து விழிப்புணர்வு வாரம் நேற்று முதல் எதிர்வரும் 11ஆம் திகதி வரை அமுல்படுத்தப்படுகிறது.

விபத்துக்களைகுறைத்துக்கொள்வது தொடர்பில் மக்களைத் தெளிவுபடுத்தும் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

திடீர் விபத்துக்களால் வருடாந்தம் நாட்டில் 10,000 முதல் 12,000 -இற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையிலானோர் உயிரிழக்கின்றனர் என சுகாதார அமைச்சு தெரிவித்தது.

நாளாந்தம் சுமார் 30 பேர் பல்வேறு விபத்துக்களால் உயிரிழக்கின்றனர்.

மக்களுக்கான விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கில் 10 ஆவது தடவையாகவும் தேசிய விபத்து விழிப்




புணர்வு வாரம் நடைமுறைப்படுத்தப்படுவதாக சுகாதார அமைச்சின் தொற்றாநோய்கள் பிரிவின் விபத்து தடுப்புப்பிரிவின் பிரதானி, சமூக வைத்திய நிபுணர் சமித சிறிதுங்க தெரிவித்துள்ளார்.

தேசிய விபத்து விழிப்புணர்வு வாரத்தின் 05 நாள்களும் 05 பிரிவுகளில் விழிப்புணர்வை வழங்க திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

முதலாவது நாளில் வாகன விபத்துகள், 2ஆம் நாளில் தொழில்சார் நிறுவன விபத்துகள், 3ஆம் நாளில் வீடுகள் மற்றும் முதியோர் இல்லங்களை அண்மித்து இடம்பெறக்கூடிய விபத்துகள், 4ஆம் நாளில் நீரில் மூழ்கி உயிரிழக்கின்றமை தொடர்பான விபத்துகள், 5ஆம் நாளில் சிறுவர்கள் தொடர்பான விபத்துகள் ஆகிய பிரிவுகளில் விழிப்புணர்வு வழங்கப்படவுள்ளது.

இந்த விழிப்புணர்வை ஒருநாளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாமல் தொடர்ச்சியாக சமூகத்தில் கொண்டு செல்வதே தமது எதிர்பார்ப்பாகும் என சுகாதார அமைச்சின் தொற்றாநோய்கள் பிரிவின் விபத்து தடுப்புப்பிரிவின் பிரதானி, சமூக வைத்திய நிபுணர் சமித சிறிதுங்க தெரிவித்துள்ளார்.



# வாகரை தேக்கஞ்சேனை கிராமத்தில் அத்துமீறிச் செயற்பட்ட வனவளத் திணைக்கள அதிகாரிகள் தொடர்பில் முறைப்பாடு

**(கல்லடி செய்தியாளர்)**

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்திற்குட்பட்ட தேக்கஞ்சேனை கிராமத்திற்கு கடந்த 4ஆம் திகதி சென்ற வனவளத் திணைக்கள அதிகாரிகள் சிலர் நீண்டகாலமாக அங்கு வாழ்ந்து வரும் மக்களை வெளியேறுமாறு கட்டாயப்படுத்தி வற்புறுத்திய விடயம் தொடர்பில் சிவில் சமூக செயற்பாட்டாளர் எஸ். இராசு தலைமையிலான அந்த கிராம மக்கள் சிலர் நேற்றுத் திங்கள்கிழமை வாகரைப் பிரதேச செயலாளரைச் சந்தித்து மேற்படி விடயம் தொடர்பில் முறைப்பாடு செய்தனர்.

எழுத்து மூலம் கொடுத்த முறைப்பாட்டைப் பெற்றுக் கொண்ட பிரதேச செயலாளர், சம்பந்தப்பட்ட பிரதேச கிராமசேவையாளரை இன்று நேரடிக் களப்பயணத்தை மேற்கொண்டு நடந்த சம்பவங்களை தமக்கு எழுத்து மூலம் அறிக்கை இடுமாறு கிராம சேவையாளருக்கு உத்தரவு பிறப்பித்தார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சாத்தான் ஓதும் வேதம்

உருத்திராட்சப் பூனை போன்று நீதி உபதேசம் செய்திருக்கிறார் இலங்கை நாட்டின் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார.

தேசிய மக்கள் சக்தி அரசின் அமைச்சராக இருந்து கொண்டு "வடக்கு, கிழக்கில் ஆயுதப் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்" என்று அவர் கூறுவது சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பானதுதான்.

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆயுதப் போரால் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். பலர் அங்கவீனமடைந்துள்ளனர். எனவே, ஆயுதப் போராட்டத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அந்த நீதியை எதிர்பார்த்தே தேசிய மக்கள் சக்தி அரசுக்குத் தமிழ் மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். எனவே, அவர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவது அரசின் முக்கிய பொறுப்பாகும்." - என்று அவர் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்.

யுத்த குற்றங்களால் - மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களால் - மனித உரிமை மீறல்களால் - பாதிக்கப்பட்ட மக்களுக்கும் வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கும் மரணச் சான்றிதழ் கொடுப்பதும், நஷ்டஈடு வழங்குவதாக பிரலாபிப்பதும் நீதி வழங்கும் ஏற்பாடுகள் அல்ல.

ஆயுதப் போராட்டத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி செய்யப்படுவதனால், அது, அந்த பாதிப்புகள் தொடர்பான உண்மைகளை கண்டறிந்து, வெளிப்படுத்தி, தவறிழைத்தோரை சட்டத்தின் முன் நிறுத்தி, பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தி, நீதியை நிலை நிலைநாட்டி, அதன் அடிப்படையில் இழப்பீடுகளை வழங்கி, மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதுதாக இருக்க வேண்டும்.

யுத்தத்தின் பெயரால் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட பெரும் கொடூரங்களை, நீதி நேர்மையுடன், சர்வதேச நியமங்களுக்கு அமைவாக, அதற்குரித்தான வழிமுறை மூலம் விசாரணை நடத்தி, உண்மைகளை கண்டறிந்து, வெளிப்படுத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி உட்பட எந்த பௌத்த - சிங்கள பேரினவாத அரசும் தயாராக இல்லை என்பதுதான் கடந்த 16 ஆண்டுகளாக தமிழ் மக்கள் பட்டறிந்து வந்த உண்மையாகும்.

சர்வதேச நியமங்களுக்கு அமைவாக, உண்மைகளை கண்டறியும் நீதியான விசாரணைக்கான பொறிமுறையை நடைமுறைப்படுத்த விடாமல் தடுப்பதில் முன்னிற்கும் முதலாவது பௌத்த - சிங்கள பேரினவாத தரப்பு தற்போதைய தேசிய மக்கள் சக்தியின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பிதான்.

இந்த நாட்டில் நடந்த மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களை - யுத்த குற்றங்களை - மிக மோசமான மனித உரிமை மீறல்களை - நீதி முறையில் விசாரிப்பதற்கு பெரும் இடைஞ்சலாக இருப்பவர்களே தேசிய மக்கள் சக்தியினர்தான்.

அவர்களே பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்று 'கதை அளப்பது' சாத்தான் வேதம் ஓதுவது அன்றி வேறு யாது? வெறும் வாய்ச் சவடால் பேச்சன்றி வேறு என்ன?

உண்மைகளை மூடி மறைத்து, ஒளித்து, அதன் மீது நீதியை நிலைநாட்டுவதும், நல்லெண்ணத்தைக் கட்டி எழுப்புவதும், சமாதானத்தை உருவாக்குவதும், மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதும் சாத்தியமற்ற விடயங்களாகும்.

# வவுனியா மேயர் பக்கச் சார்பாகச் செயற்படுகின்றார் மாநகரசபை உறுப்பினர் பிறேமதாஸ் குற்றச்சாட்டு!

(கி.வசந்தன்)

வவுனியா மாநகரசபை மேயர் பக்கச் சார்பாக செயற்படுகின்றார் என மாநகர சபை உறுப்பினர் சி.பிறேமதாஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமது மாநகர சபையின் கன்னி அமர்வு கடந்த 30 ஆம் திகதி இடம் பெற்றது. வவுனியா மாநகரை அழகூட்டும் பொருட்டு பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அந்த தீர்மானங்களில் ஒன்று, நடைபாதை வியாபாரிகளுக்கான இடங்களை ஒதுக்கி, அவர்களுக்கான இடத்தை அடையாளப்படுத்தி வழங்கி, அதன் பின் அந்த நடைபாதை வியாபாரத்தை அப்புறப் படுத்த வேண்டும் என்பதாகும்.

அதற்கு புறம்பாக மாநகரசபை முதல்வர், துணைமுதல்வர் ஆகியோர் மாநகரசபையில் உள்ள நடைபாதை வியாபாரிகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கான கால அவகாசம் கொடுக்கப்படவில்லை. இது அரசியல் அழுத்தங்களால் செய்யப்படுகிறது.

மூவின மக்களும் சேர்ந்து வாழும் மண் வவுனியா. இங்கு அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழ்கின்றனர். அவர்களது இன ஒற்றுமையில் முறுகலை ஏற்படுத்தி, இன முரண்பாட்டை உருவாக்கும் செயற்பாட்டில் இவர்கள் இறங்கியுள்ளார்கள். எல்லோருக்கும் சமமான நீதியாகவும், நடுநிலையாகவும் செயற்பட வேண்டிய மாநகர சபை மேயரும், உப மேயரும் அரசியலுக்காகச் செயற்பட்டுக் கொண்



டிருக்கிறார்கள். ஒரு இன மக்களுக்கு நடைபாதை வியாபாரம் செய்ய அனுமதி கொடுத்துக் கொண்டும், அத்துமீறி கட்டடம் கட்டுவதற்கும் அனுமதி கொடுத்துக் கொண்டும், ஏனைய இன நடைபாதை வியாபாரிகளுககு எதிராகவும் செயற்படுகிறார்கள். பள்ளிவாசலுக்கு அருகாமையில் அனுமதியின்றி கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் வியாபார நிலையத்தை அகற்றாதது ஏன்? தமது பதவிக்கு பாதிப்பு வரக் கூடாது என்பதற்காகவா இவ்வாறு செயற்படுகிறார்கள்?

வவுனியா நடைபாதை வியாபாரிகள் அனைவரும் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்கள். அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. திடீரென கூறியதால் எதுவும் செய்ய முடியாது. இவர்கள் சட்ட திட்டங்களுக்கு புறம்பாக செய்கிறார்கள் என்பது எனது கருத்து. 14 நாள்களுககு முன் அவர்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டு இருக்க வேண்டும். அவ்வாறு அனுப்பப்பட வில்லை. 30 ஆம் திகதி கன்னி அமர்வில் எடுத்த தீர்மானத்திகு 6 நாள்களுக்குள் நடவடிக்கை எடுக்கிறார்கள்.

குறைந்தது 15 ஆம் திகதிக்கு பின் தான் இவர்கள் நடவடிக்கை எடுக்க முடியும். இந்த மாநகரசபையில் ஓர் இடத்தில் ஓர் இனத்திற்கு சார்பாகவும், இன்னொரு இனத்திற்கு அநீதியாகவும் செயற்படுகிறார்கள். இது சபையில் எடுத்த தீர்மானத்திற்கு புறம்பான நடவடிக்கை. எடுத்துக் காட்டாக செயற்பட வேண்டிய இவர்கள் சில அரசியல் வாதிகளின் சொற்களை கேட்டு நடக்கிறார்கள்.

அரசியல் அழுத்தங்கள் இல்லாத மாநகர சபையை உருவாக்க வேண்டும். பசுமையான ஒரு மாநகர ஆட்சியை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் மக்கள் நலன் சார்ந்த விடயங்களுக்கு ஏகமனதான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இருந்தாலும் அதற்கான கால அவகாசங்கள் கொடுக்கப்படவில்லை. இது பழிவாங்கும் நோககம். நீதி, நேர்மை, கடமை என்பவற்றில் சரியாக நடக்க வேண்டும். அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தாது மக்கள் நலன்சார்ந்து செயற்பட வேண்டும்.

நான் மக்களுக்காக அமைத்த குழாய் கிணற்றை தடுத்து நிறுத்தினார் முதல்வர். ஆனால் இன்று வரை அந்த குழாய் கிணறு திருத்திக் கொடுக்கப்படவில்லை. அவர்களது அநீதிக்கு எதிராக என்னால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# உலக வங்கியின் வகைப்படுத்தலுக்கமைய நடுத்தர வருமானம் பெறும் நாடாக இலங்கை

இலங்கை தொடர்ந்தும் குறைந்த – நடுத்தர வருமானம் பெறும் நாடாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் ஜூலை 1ஆம் திகதி முதல் 2026 ஆம் ஆண்டின் ஜூன் மாதம் வரையான காலப்பகுதிக்காக உலக வங்கியின் நாடுகளுக்கான வகைப்படுத்தல் அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைக்கு அமைய இந்தியா உள்ளிட்ட தெற்காசியாவின் 06 நாடுகள், குறைந்த – நடுத்தர வருமானம் பெறும் நாடுகளுக்கான பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தெற்காசிய நாடுகளில் ஆப்கானிஸ்தான் மாத்திரமே குறைந்த வருமானம் பெறும் நாடாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

2026 நிதியாண்டிற்கமைய 1,136 அமெரிக்க டொலரில் இருந்து 4,495 அமெரிக்க டொலர் வரையான தனிநபர் மொத்த தேசிய உற்பத்தியைக் கொண்டுள்ள நாடுகள் குறைந்த – நடுத்தர வருமானம் பெறும் நாடுகளாக பெயரிடப்படுகின்றன.

குறைந்த வருமானம் பெறும் நாடுகள், குறைந்த – நடுத்தர வருமானம் பெறும் நாடுகள், உயர் – நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் மற்றும் உயர் வருமானம் பெறும் நாடுகள் ஆகிய பிரிவுகளில் நாடுகள் வகைப் படுத்தப்படுகின்றன.

முந்தைய ஆண்டில் அமெரிக்க டொலரினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ள அட்லஸ் முறைமையைப் பயன்படுத்தி கணக்கிடப்படும் நாட்டின் தனிநபர் மொத்த தேசிய உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு இந்த வகைப் படுத்தல் தயாரிக்கப்படுகின்றது.

உலக வங்கியின் இந்த வகைப் படுத்தலானது நாடொன்றின் அபிவிருத்தி செயற்பாடுகளைப் பிரதிபலிக்கும் முக்கிய அளவீட்டு காரணியாகும்.

அத்துடன், இந்த வகைப்படுத்தல் தரவுகள், அபிவிருத்தி நிதியுதவிகள் மற்றும் கடன் நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களில் முக்கியமான காரணியாக அமையுமென உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

# பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்பிலிருந்த முன்னாள் அரசியல் கைதி அரவிந்தனுக்குப் பிணை

(கி.வசந்தன்)

முன்னாள் அரசியல் கைதியும், போராளிகள் நலன்புரிச் சங்க வவுனியா மாவட்ட தலைவருமான ஆனந்தவர்மன் எனும் அரவிந்தன் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக பயங்கரவாதச் தடைச் சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த 2024 மார்ச் மாதம் விடுதலைப் புலிகளை ஊக்குவிக்கும் வகையில் முகநூலில் பதிவுகள் இட்டார் என அவர் கைதாகி இருந்தார். பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் அந்த முகநூல் பதிவு தொடர்பில் வாக்கு மூலம் பெறுவதற்காக அழைக்கப்பட்ட நிலையில் அவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.



ஏற்கனவே கைது செய்யப்பட்டு பல வருடங்களாக அரசியல் கைதியாக தடுத்து வைக்கப்பட்டிருந்து நீதிமன்ற உத்தரவுககமைய அவர் விடுவிக்கப்பட்டிருந்தார். அதன்பின் வவுனியாவில் அவர் வசித்து வந்தமையுடன் போராளிகள் நலன்புரிச் சங்கம் என்ற அமைப்பாக செயற்பட்டு வந்த நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டு மீண்டும் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் அவர் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.





# மாவட்டத் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்க அபிவிருத்திக் குழு திருகோணமலையில் ஸ்தாபிதம்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தின் சிறு மற்றும் நடுத்தர தொழிற்முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் மாவட்ட தொழில் முயற்சியாளர்கள் அபிவிருத்திக் குழு நேற்று அமைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன மற்றும் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார ஆகியோரின் தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த, உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கி செல்ல வேண்டும் என்றும், உள்ளூரில் பொருள்களை விற்பனை செய்யும் தொழிற்முயற்சியாளர்கள், ஏற்றுமதி தொழிற்முயற்சியாளர்களாக வளர வேண்டும் என்றும், பிராந்திய ரீதியாக பொருள்களை விற்பனை செய்யும் தொழிற்முயற்சியாளர்கள் தங்கள் தற்போதைய மட்டத்திலிருந்து தேசிய மட்டத்திற்கு ஒரு படி முன்னேற வேண்டும் என்றும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன கூறினார்.

மாவட்டத்தின் சிறு மற்றும் நடுத்தர தொழிற்முயற்சியாளர்களின் சிக்கல்களை தீர்த்து வைத்தல், மாவட்டத்தின் தொழிற்முயற்சி சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களின் சேவைகளை ஒன்றிணைப்பதன் ஊடாக மிகவும் பரந்த மற்றும் வினைத்திறனான சேவைத் தொகுதியொன்றை தாபித்தல், சந்தைப் பிரச்சினைகளைத் தீர்ப்பது, முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துவது, புதிய தொழிற்முயற்சியாளரை ஊக்குவித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் அதிகாரிகளை ஈடுபடுத்துவதன் மூலம் இந்தக் குழு உருவாக்கப்பட்டது.

இதன்போது கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் இசட்.ஏ.எம். பைசல், திருகோணமலை மாவட்ட சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் உதவி பணிப்பாளர் என்.பிரணவன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கே. விஜயதாசன் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.





# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 31 பேர் பத்து நாள்களில் கைது!

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

இலங்கை கடற்படை கடந்த ஜூன் 20 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையான 10 நாள்களில் கடற்பரப்பில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளில் தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 06 டிங்கி படகுகளை மடக்கினர். 31 மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

அதன்படி கிழக்கு கடற்படை கட்டளையின் திருகோணமலையின் சல்லிக் கோவில், சல்லிதீவு போல்டர் பொயின்ட் மற்றும் மலைமுண்டல் ஆகிய கடற்கரை மற்றும் கடல் பகுதிகளை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் விளைவாக தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகள் பயன்பாடுத்தியமை, மின்சார விளக்குகளை பயன்படுத்தியமை, இரவில் சட்ட விரோதமாக சுழியோடி கடலட்டைகளை பிடித்தமைக்காக 31 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். 06 டிங்கி படகுகள் மற்றும் 11 தடைசெய்யப்பட்ட வலைகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கடற்படையால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள், மீன்பிடி படகுகள், மீன்கள், கடலட்டைகள் ஆகியவற்றுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக திருகோணமலை, மாங்கேணி மற்றும் ஈச்சிலம்பத்து மீன்பிடி மற்றும் நீர்வளத் துறை அலுவலகங்களிலும், உப்புவெளி பொலிஸ் நிலையத்திலும் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.













# திட்டமிட்ட குற்றச்செயல்களை தடுப்பதற்காக தொடர் விசாரணை

## அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தகவல்

திட்டமிட்ட குற்றச்செயல்களைத் தடுப்பதற்காக தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என சுகாதார, வெகுசன ஊடக அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பாதாள உலகக் குழுக்களுக்கிடையிலான மோதல்களினாலேயே தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோக சம்பவங்கள் பதிவாகி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



போதைப்பொருள் மற்றும் சட்ட விரோத கடத்தல்களுடன் தொடர்புடைய செயற்பாடுகள் இதன் பின்னணியில் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர் எனவும் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவற்றை முழுமையாக தடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இனியபாரதி மீது அடுக்கப்படும் குற்றச்சாட்டுகள்

**(கனகராசா சரவணன்)**

அம்பாறை திருக்கோவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் உட்பட 2005 மற்றும் 2008 க்கு இடையில் கிழக்கு மாகாணத்தில் நடந்த கொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள், துப்பாக்கிகளைப் பயன்படுத்துதல், சித்திரவதைக் கூடங்களை நடத்துதல், மிரட்டிப் பணம் பறித்தல் போன்ற சம்பவங்களுடன் தொடர்புட்ட இனியபாரதி மற்றும் தவசீலன் ஆகியோரை சந்தேகத்தின் அடிப்படையில் திருக்கோவில் மற்றும் சந்திவெளி பகுதிகளில் கைது செய்து செய்துள்ளனர் எனக் குற்ற விசாரணைப் பிரிவினர் தெரிவித்தனர்.

குற்ற விசாரணைப் பிரிவினரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருக்கோவில் மற்றும் மட்டு. சந்திவெளிப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட இனியபாரதி என்றழைக்கப்படும் கே. புஸ்பகுமார், அவரது சகாவான சசீதரன் தவசீலன் கைது தொடர்பாக குற்றவிசாரணைப் பிரிவினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை முன்தினம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

குற்றப் புலனாய்வுத்துறையின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழு, 2005 மற்றும் 2008 க்கு இடையில் கிழக்கு மாகாணத்தில் நடந்த கொலைகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள், துப்பாக்கிகளைப் பயன்படுத்துதல், சித்திரவதைக் கூடங்களை நடத்துதல் மற்றும் மிரட்டி பணம் பறித்தல் குறித்து நீண்ட விசாரணையை மேற்கொண்டது.

இந்த விசாரணைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளின் அடிப்படையில், மேற்கூறிய குற்றங்களில் தொடர்புடை. - 45 மற்றும் 44 வயதுடைய - இரண்டு சந்தேக நபர்களை மேற்கூறிய பிரிவின் அதிகாரிகள் குழு 2025.07.06 அன்று திருக்கோவில் மற்றும் சந்திவெளி பகுதிகளில் வைத்துக் கைது செய்தது.

சந்தேக நபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், முதல் சந்தேக நபரான



இனியபாரதி 2004 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறிய கருணா அம்மான் பிரிவின் திருக்கோவில் பகுதியில் உள்ள ஆயுதமேந்திய முகாமின் தலைவராகப் பணியாற்றியவர் என்பது உட்பட பல விடயங்கள் தெரிய வந்தது.

அவர் 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் கருணாஅம்மான் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அரசியல் கட்சியின் அம்பாறை மாவட்ட ஜனாதிபதி ஒருங்கிணைப்பு அதிகாரியாகப் பணியாற்றியவர் என்பதுடன் 2012 முதல் 2015 வரை அந்தப் பிரிவு பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது சந்தேக நபரான தவசீலன் முதல் சந்தேக நபரின் சீடராகப் பணியாற்றியவர். இவர்கள் இருவரும் முதன்மையாக கிழக்கு மாகாணத்தில் குற்றப் புலனாய்வுத் துறையின் காவலில் உள்ள சிவநேசதுரை சந்திரகாந்தன் எனப்படும் பிள்ளையான் தலைமையில் குற்றங்களைச் செய்திருப்பதும் தெரிய வந்தது.

இந்த சந்தேக நபர்கள் தொடர்பான விசாரணைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட குற்றங்கள் மற்றும் அவர்களின் உதவி மற்றும் உடந்தைகள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:-

✯ 2005.02.07 அன்று பொலன்னறுவை வெலிகந்த புல்லேயராடி பகுதியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு உள்ளிட்ட 06 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

✯ 2007.05.09 அன்று சிந்துஜன் என்ற ஜோன்சன் ஜெயகாந்தன் படுகொலை செய்யப்பட்டார்.

✯ 2007.06.28 அன்று திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் தில்லைநாயகம் உதயகுமார் படுகொலை செய்யப்பட்டார்.

✯ 2007.07.27 அன்று திருக்கோவிலைச் சேர்ந்த சிவனடிகன் அழகுராசா கடத்தப்பட்டார். ஃ 2008.04.20 அன்று கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பு பகுதி கிராம சேவை உத்தியோகத்தர்களான கந்தையா நாகராசா மற்றும் கனகரத்தினம் ஆனந்தி ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர்.

✯ 25.09.2008 அன்று, திருக்கோவி விநாயகபுரத்தைச் சேர்ந்த திருமால் திருச்செல்வம் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

✯ 21.11.2008 அன்று, திருக்கோவில் விநாயகபுரத்தைச் சேர்ந்த இராசையா கோபுலன் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது தாயாரும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

✯ 21.12.2022 அன்று அக்கரைப்பற்று நீதிமன்றத்திற்கு தீ வைத்த சம்பவத்தில் இந்த சந்தேக நபர்கள் நேரடி யாக ஈடுபட்டுள்ளார்களா என்பதை அறிய விசாரணைகள் நடந்து வருகின்றன.

முதல் சந்தேக நபர் இனியபாரதி தொடர்பான கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைகளின்படி, கிழக்கு மாகாணத்தில் கொலைகள், கடத்தல்கள், சித்திரவதை கூடங்களை நடத்துதல் மற்றும் துப்பாக்கிகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபட்ட ஒரு நபராகவும் அவர் பெயரிடப்பட்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

இந்த சந்தேக நபர்கள் குறித்து குற்றப் புலனாய்வுத் துறை மேலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

# இனிய பாரதியின் சாரதியாகச் செயற்பட்டவர் நேற்றுக் கல்முனையில் வைத்துக் கைதானார்

(பாறுக் ஷிஹான்)

கருணா - பிள்ளையான் அணியின் முக்கியஸ்தர் இனிய பாரதி என்றழைக் கப்படும் கே. புஷ்பகுமாரின் வாகன சாரதியாக செயற்பட்டிருந்த ஒருவரை நேற்று குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இக்கைது நடவடிக்கை அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையகப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதான பஸ் நிலையத்திற்கு அருகில் இடம்பெற்றது. 34 வயதுடைய, கனகர் வீதி, தம்பிலுவில் 01 பகுதியை சேர்ந்த செழியன் என அழைக்கப்படும் அழகரட்ணம் யுவராஜ் என்பவரே இவ்வாறு கைதானார்.

இவர் 2007 - 2009 காலப்பகுதியில் இனியபாரதியின் சாரதியாக செயற்பட் டுள்ளார் என ஆரம்பக் கட்ட விசார ணையில் இருந்து தெரியவந்துள்ளது. அத்துடன் தற்போது அவர் பொத்துவில் - மட்டக்களப்பு வழித்தட பஸ் சாரதியாக செயற்பட்டு வந்துள்ளார். நேற்றுப் பொத்துவில் பகுதியில் இருந்து வழமை போன்று கல்முனை ஊடாக மட்டக்களப் பிற்கு செல்லும் போது கல்முனை பிரதான பஸ் நிலையத்திற்கு அருகில் காத்திருந்த குற்றப்பலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் அவரைக் கைது செய்த மையுடன் அம்பாறைக்கு மேலதிக விசாரணைக்காக அழைத்து சென் றுள்ளனர்.

இதே வேளை கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் யுத்த காலத் தில் கருணா அணியின் அம்பாறை



மற்றும் திருக்கோவில் பகுதிக்கு பொறுப் பாக இருந்தவருமான இனியபாரதி கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணை வலயத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளார்.

திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள முனியக்காடு பகுதியில் வைத்து அவரது வீட்டில் வைத்து இனிய பாரதி சுற்றி வளைக்கப்பட்டு புலனாய் பிரிவினால் கைது செய்யப்பட்டார்.அத்தடன் அவரது சகாவான சிவலிங்கம் தவசீலன் என்பவர் மட்டக்களப்பு சந்திவெளி பகுதியில் வைத்து கைதானார்.

2005 முதல் 2009 ம் ஆண்டு வரை நடந்த பல திட்டமிடப்பட்ட குற்றங்களுக்கா கவும், பல கடத்தல்கள், காணாமலாக்கு தல், கப்பம், அச்சுறுத்துதல்,கொலைகள், சிறுவர்களை பலவந்தமாகத் தனது படையில் இணைத்து போராளியாக்கி யமை போன்ற விடயங்கள் தொடர்பில் இனியபாரதிக்கு எதிராக விசாரணைகள் நடக்கின்றன எனக் கூறப்படுகின் றது.

இது போன்ற பல குற்றங்களின் அடிப்படையில் கடந்த காலங்களில் இனியபாரதிக்கு கல்முனை நீதிமன்றத் தால் 10 வருடம் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டிருந்த தாகவும் கூறப்பட்டது.

அத்தோடு மன்னார் மாவட்டத்தில் இலுப்பைக் கடவை வீதியில் தனது சொகுசு ஜீப் வாகனத்தில் 164 கிலோ கேரளா கஞ்சா கடத்திய நிலையில் சில ஆண்டுகளுக்கு முன்னர் கைது செய் யப்பட்டு, பின்னர் அவர் விடுதலையாகி யிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது..

அவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அம்பாறை மாவட்ட இணைப்பாளராகவும் செயற்பட்டவர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

அதே போல அம்பாறை, திருக்கோ வில், அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு ஆகிய பிரதேசங்களில் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை 7 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக இனியபாரதி கைது செய்யப்பட்டு விடுவிக் கப்பட்டு இருந்தார். இவ்வாறான குற்ற ஆவணங்களை அழிக்கும் நோக்குடன் அக்கரைப்பற்று நீதிமன்றிற்கு இவர் தீ வைத்ததார் எனவும் கூறப்பட்டது.

இது தவிர, காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு வில் இனியபாரதி குழுவினர் தமது உற வுகளைக் கடத்திக் காணாமலாக்கியது தொடர்பான முறைப்பாடுகளை சாட்சி யங்களுடன் பலர் பதிவு செய்திருக் கின்றனர் .



# தேங்காய் விலை குறைவடைந்தது

உள்நாட்டுச் சந்தையில் தேங்காயின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக விற்ப னையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில மாதங்களாக, 220 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட தேங்காய் ஒன்று, தற்போது 100 ரூபா முதல் 170 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகிறது. இதனால், விற்பனை அதிகரித்துள் எதாகவும் விற்பனையா ளர்கள் குறிப் பிட்டுள்ளனர்.

இந்த நிலையில் எதிர்வரும் மாதங்க ளில் தேங்காய் விலை மேலும் வீழ்ச்சிய டையக் கூடும் எனவும் அவர்கள் தெரி வித்துள்ளனர்.

இதேநேரம் தற்போது, சந்தையில் தேவைக்கு மேலதிகமாக தேங்காய் இருப்பு அதிகரித்துள்ளதாக விற்பனை யாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# மறுவாழ்வு முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு வீடுகள்

## முதல்வர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்

தமிழகத்தின் மறுவாழ்வு முகாம்களில் வாழும் இலங்கை மக்களுக்காக கட்டப்பட்ட வீடுகளை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

தமிழகத்தின் முகாம்களில் தங்கியுள்ள இலங்கை மக்களுக்காக, விழிப்புரம், விருதுநகர், திருப்பூர், தருமபுரி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் சுமார் 729 வீடுகள் இதன் போது திறந்து வைக்கப்பட்டன.

சுமார் 38 கோடி ரூபா செலவில் இந்த வீடுகள் கட்டப்பட்டுள்ளன என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

## போதைப் பொருள் வழக்கு:

# நடிகர்களின் பிணை மனுக்கள் மீது இன்று உயர் நீதிமன்றம் உத்தரவு

போதைப் பொருள் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள நடிகர்கள் ஸ்ரீகாந்த், கிருஷ்ணாவின் பிணை மனுக்கள் மீது இன்று உத்தரவு பிறப்பிக்கப்படும் என சென்னை உயர் நீதிமன்றம் அறிவித்தது.

போதைப் பொருள் வழக்கில், கடந்த மாதம் கைது செய்யப்பட்ட நடிகர்கள் ஸ்ரீகாந்த் மற்றும் கிருஷ்ணா ஆகியோர் பிணை கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்கள், நீதிபதி நிர்மல் குமார் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது, ஸ்ரீகாந்த் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஜான் சத்தியன், ஸ்ரீகாந்த் போதைப் பொருள் பயன்படுத்தியதாக கைது செய்யப்பட்டுள்ளார். அவர், வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள முதல் எதிரி பிரதீப்குமார் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து போதைப் பொருள் ஏதும் கைப்பற்றப்படவில்லை என வாதிட்டார்.



நடிகர் கிருஷ்ணா தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் இன்பண்ட் தினேஷ், "பொலிஸார் அனுப்பிய அழைப்பாணையை ஏற்று விசாரணைக்கு ஆஜரான நிலையில் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார். கைது குறித்த தகவல் மட்டுமே தெரிவிக்கப்பட்டது. கைதுக்கான காரணங்கள் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. அவரிடம் நடத்திய மருத்துவப் பரிசோதனையில், போதைப் பொருள் பயன்படுத்தியது நிரூபிக்கப்படவில்லை." என வாதிட்டார்.

இதற்கு பதிலளித்த அரசுத்தரப்பு வழக்கறிஞர், "கொலை முயற்சி வழக் கில் கைது செய்யப்பட்ட அ.தி.மு.க. முன்னாள் நிர்வாகியான பிரசாத் திடம் நடத்திய விசாரணையில் போதைப் பொருள் புழக்கம் குறித்து தெரிய வந்ததாகவும், அவரது ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், முதல் எதிரி பிரவீன் குமாரும், அவரது வாக்குமூலத்தின் அடிப்படையில் நடிகர் ஸ்ரீகாந்த், கிருஷ்ணா கைது செய்யப்பட்டனர்." என்றார்.

அப்போது ஸ்ரீகாந்த் தரப்பு வழக்கறிஞர், வீட்டில் குழந்தையுடன் விளையாடிக் கொண்டிருந்த போது பொலிஸார் கைது செய்தனர் என தெரிவித்தார்

அனைத்து தரப்பு வாதங்களும் முடிவடைந்ததை அடுத்து, ஸ்ரீகாந்த் மற்றும் கிருஷ்ணாவின் பிணை மனுக்கள் மீது இன்று உத்தரவு பிறப்பிக்கப்படும் என நீதிபதி நிர்மல்குமார் அறிவித்திருந்தார்.

# ரிதன்யா மரணத்துக்கு நீதி கேட்டு அவிநாசியில் திரண்ட மக்கள்

இளம்பெண் ரிதன்யா மரணத்துக்கு நீதி கேட்டு, அவிநாசியில் நேற்று திங்கள் கிழமை மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

திருப்பூர் மாவட்டம் அவிநாசி கைகாட்டிபுதூரை சேர்ந்த ரிதன்யா திருமணம் நடந்த 78 நாளில் கணவர் குடும்பத்தினரின் கொடுமை தாங்காமல் விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டார். அவரது தந்தைக்கு அவர் அனுப்பிய வாட்ஸ் அப் குரல் பதிவில் , சமூகத்தில் பலரையும் உலுக்கியது. இதுதொடர்பாக, ரிதன்யாவின் கணவர் கவின்குமார், மாமனார் ஈஸ்வரமூர்த்தி, மாமியார் சித்ராதேவி ஆகிய 3 பேர் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், ரிதன்யாவின் மரணத்துக்கு நீதி கேட்டு, அவிநாசி புதிய பேருந்து நிலையத்தில் இன்று அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடந்தது. இதில் பெண்கள், பல்வேறு




சமூக நல அமைப்புகள், அரசியல் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் தன்னெழுச்சியாக பங்கேற்று ரிதன்யா உருவப்படத்துக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

# பதவி நீக்கம் செய்யப்பட்டதால் விரக்தி; ரஷ்ய போக்குவரத்து அமைச்சர் தற்கொலை

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தன்னை பதவி நீக்கம் செய்த சில மணி நேரங்களில் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார் அந்நாட்டின் முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் ரோமன் ஸ்டாரோவோயிட்.

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவின் புறநகர்ப் பகுதியில் காரில் அவருடைய உடல் கண்டெடுக்கப்பட்டதாக ரஷ்ய செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைன் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள குர்ஸ்க் பிராந்தியத்தின் ஆளுநராக ஐந்து ஆண்டுகள் பணியாற்றிய ரோமன் கடந்த ஆண்டு மே மாதம் ரஷ்யாவின் போக்குவரத்துத் துறை அமைச்சராக புதினால் நியமிக்கப்பட்டார்.

கடந்த சில நாள்களுக்கு முன்பு, உக்ரைன் ட்ரோன் தாக்குதல் தொடர்



பான பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காரணமாக ரஷ்ய விமான நிலையங்களில் கிட்டத்தட்ட 300 இற்கும் மேற்பட்ட விமானங்கள் தரையிறக்கப்பட்டன.

அத்துடன், உஸ்ட் - லுகா துறைமுகத்தில் டேங்கர் கப்பல் ஒன்று வெடித்துச் சிதறியதில் அம்மோனியா வாயுக் கசிவு ஏற்பட்டது. இதன் காரணமாகவே போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த ரோமன் நீக்கப்பட்டார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் பதவி நீக்கத்துக்கான காரணம் எதையும் ரஷ்ய அரசு வெளியிடவில்லை.

கடந்த சில மாதங்களாகவே ரோமன் குர்ஸ்க் ஆளுநராக இருந்த போது அப்பகுதியில் நடந்த ஊழல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் அவர் மீது வைக்கப்பட்டதால் அவரது அமைச்சர் பதவி எப்போதும் வேண்டுமானாலும் பறிக்கப்படலாம் என்று சூழல் நிலவி வந்ததாக கூறப்படுகிறது.

தற்போது நோவ்கோரோட் ஆளுநராக இருந்த ஆண்ட்ரே நிகிடின் புதிய போக்குவரத்துத் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். ஆண்ட்ரே நிகிடினின் தொழில்முறை அனுபவம், போக்குவரத்துத் துறைக்கு சிறந்த பங்களிப்பை வழங்கும் என்று ஜனாதிபதி புடின் நம்புவதாக ரஷ்ய அரசின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.





# உக்ரைனின் கார்கிவில் ரஷ்யா நடத்திய ட்ரோன் தாக்குதல்களில் 43 பேர் காயம்

உக்ரைனின் இரண்டாவது பெரிய நகரமான கார்கிவில் ரஷ்யா நடத்திய ட்ரோன் தாக்குதல்களில் 43 பேர் காயமடைந்துள்ளனர் என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யா நடத்திய இந்த தாக்குதல்களில் கார்கிவில் உள்ள குடியிருப்பு கட்டடங்கள், ஒரு குழந்தைமனை மற்றும் பிராந்திய இராணுவ ஆட்சேர்ப்பு அலுவலகம் உள்ளிட்ட இடங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

அதனை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது தாக்குதல் தொடர்பில் நகர மேயர் இஹோர் தெரெகோவ் கூறுகையில்,

“பத்துமணிநேரத்துக்குள் ஆறு ஷாகெட் ட்ரோன்கள் கார்கிவில் வீழ்த்தப்பட்டன.இவை குடியிருப்புகள், வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் என்பவற்றையே குறிவைத்தன.” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, இரண்டு தாக்குதல்களையும் இணைத்து 43 பேர் காயமடைந்துள்ளனர் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

2022 பெப்ரவரியில் ரஷ்யா முழுமையான படையெடுப்பை ஆரம்பித்ததிலிருந்து, உக்ரைனின் முக்கிய நகரமான கார்கிவ் தொடர்ந்து தாக்குதல்களுக்கு இலக்காகி வருகிறது.

கடந்த இரவில் பல இடங்களில் ரஷ்யா ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல்கள் நடத்தி இருந்தாலும், அவற்றுள் கார்கிவ் நகரம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, உக்ரைனின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள சபோரிசியா நகரிலும், ஒரு காலை ட்ரோன் தாக்குதலில் 17 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் பல குடியிருப்புகள் மற்றும் ஒரு பல்கலைக்கழகக் கட்டடம் சேதமடைந்துள்ளதாக ஆளுநர் இவான் ஃபெடோவ் கூறியுள்ளார்.

மேலும், தெற்கு நகரமான ஒடெஸாவில் ஒரு உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில், போர் தொடங்கியதிலிருந்து ரஷ்யா மேற்கொண்ட விமானத் தாக்குதல்களில் ஆயிரக்கணக்கான உக்ரைனிய குடிமக்கள் உயிரிழந்துள்ளனர்.

எனினும், ரஷ்யா, “நாங்கள் குடிமக்களை நேரடியாகக் குறிவைப்பதில்லை, உக்ரைனின் போர் முயற்சிக்கு ஆதரவு தரும் உள்கட்டமைப்புகளையே குறிவைக்கிறோம்” கூறி வருகிறது.

இந்நிலையில், உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி, உக்ரைனின் பாதுகாப்பை மேம்படுத்த மேற்கத்திய நாடுகள் மேற்கொண்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.





# இன்றைய ராசி பலன்கள் - 08.07.2025

## மேஷம்

இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. இன்று சில விஷயங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண அதனை தவிர்த்தல் நல்லது.

வீட்டுப் புனரமைப்புக்காக பணம் செலவு செய்ய நேரலாம். தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

தாயின் உடல் நலத்துக்காக செலவு செய்ய நேரும்.

## ரிஷபம்

இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடும் சூழல் ஏற்படும். இதனால் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். சமூக கூட்டங்களில் கலந்து கொள்வீர்கள். புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்வீர்கள்.

வெற்றிகரமான பலன்களைக் காண கடினமாக உழைக்க வேண்டும். சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் வைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும். இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன் வாங்க நேரலாம்.

## மிதுனம்

இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கலாம். தைரியம் மற்றும் உறுதி கொண்டால் நன்மை கிடைக்கும். இன்று மொத்தத்தில் வளர்ச்சி கிடைக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

நீங்கள் புத்துணர்ச்சியோடு வேலையை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டமான நாள். பண வரவு காணப்படும்.

உங்கள் மன வலிமை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.

## கடகம்

இன்று நீங்கள் உற்சாகத்துடன் இருக்க வேண்டும். அதிக சிந்தனைகளை தவிர்க்க வேண்டியது அவசியம். ஆன்மீகத்தில் ஈடுபட்டு அமைதி காணலாம்.

அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. உங்கள் பொறுப்புகளை ஆற்றும் போது கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் எரிச்சலும் கோபமும் அடைவீர்கள். எனவே உங்கள் பிரியமானவரிடம் நட்பு முறையோடு பழகுவது நல்லது.

அஜாக்கிரதை காரணமாக பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. நிதி நிலைமையை மோசமாக்கக்கூடிய வகையில் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம்.

## சிம்மம்

இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் இருப்பது நல்லது. இன்று தெளிந்த மனதுடன் இருந்தால் உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்கலாம்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும். பணியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் மனதில் உள்ள கசப்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் குழப்பம் ஏற்படும். உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவினங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். சிறிது பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

## கன்னி

இன்று உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் செயல்கள் சுமுகமாக நடக்க அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். சில சமயங்களில் நம்பிக்கை இழப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயற்பட்டால் வெற்றி காணலாம்.

அதிக பணிகளை சந்திக்க நேரும். உங்கள் சக பணியாளர்களுடன் சகஜமாகப் பழகவும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் புரிந்துகொண்ட மனநிலையோடு பழக வேண்டும்.

நிதிநிலைமை சீராக இருக்காது. இன்றைய செலவினங்களை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. தகுந்த மருத்துவ சிகிச்சை மேற்கொள்வது நல்லது.

## துலாம்

இன்று மகிழ்ச்சியளிக்கத்தக்க வகையில் வளர்ச்சி காணப்படும். உங்களிடம் எதிர்காலத்தைப் பற்றிய பரந்த நோக்கு காணப்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய கடினமாக உழைப்பீர்கள். உங்கள் வழியில் வரும் தடைகளை தகர்த்தெறிவீர்கள்.

நீங்கள் பலனை அதிகம் எதிர்பார்க்காமல் பணியாற்றுவீர்கள். இதனால் குறித்தநேரத்தில் பணிகளை ஆற்றுவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டையும் ஆதரவையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாகவும் விசுவாசமாகவும் இருப்பீர்கள். இதனால் இருவரும் நல்ல உறவை பராமரிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். வங்கியிருப்பு உங்களுக்கு சாதகமான வகையில் பராமரிப்பீர்கள்.

## விருச்சிகம்

இன்று சுமுகமான பலன்கள் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைய இந்நாளை பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று உங்கள் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் உறுதியானது. இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் நம்பிக்கை உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். இன்று நிதி வளர்ச்சிக்கு உங்கள் ஆற்றலை பயன்படுத்திக் கொள்ளலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.07.2025




இன்று எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். புதிய மனிதர்களின் தொடர்பும் அதனால் நல்ல பயனும் கிடைக்கும். இதனால் உங்கள் தொடர்பு வட்டம் விரிவடையும். வாழ்க்கை உங்களுக்கு கவர்ச்சிகரமாக இருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக இன்று நீங்கள் பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணிகள் அதிகமாக இருக்கும். அவைகளை திறமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடும் விவாதங்களும் காணப்படும். இருவரும் நட்பு முறையோடு பழகுவீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று சுமாரான நாள். பண வரவுக்கும் சேமிப்புக்கும் அதிர்ஷ்டம் குறைவான நாள்.




இன்று காணப்படும் கடினமான சூழல் காரணமாக தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதன் மூலம் இந்தச் சூழ்நிலைகளை ஜெயிக்கலாம். பிரார்த்தனை நல்ல பலன் தரும்.

பணிகளைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்களின் குழப்பமான மன உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்த எண்ணுவீர்கள். இருவரும் சமமாகப் பழக மகிழ்ச்சியாக நட்புடன் பழக வேண்டும்.இன்று பண இழப்பு ஏற்படலாம். உங்களின் பிரியமான ஒருவரின் உடல் நிலைக்காக பணம் செலவு செய்ய நேரும்.




இன்று மகிழ்ச்சி அலை வீசும். முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களைத் தரும்.

உங்களின் தனித்தன்மைக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் கீழ் பணிபுரிபவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்களின் தகவல் பரிமாற்றம் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். புதிய முதலீடுகளுக்கு திட்டமிடலாம்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும். உஙகளிடம் உறுதியும் ஆற்றலும் நிறைந்திருக்கும்.




இன்று விரும்பிய பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும் வகையில் பயனுள்ள திட்டங்களைத் தீட்டுங்கள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். பல நன்மைகளை அடைவதற்கான சாத்தியம் உள்ளது. கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் நெருங்கிய நண்பர் ஒருவரின் திருமண விழாவில் இருவரும் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களின் வாழ்க்கைத் துணைக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.பண வரவு சாதகமாக உள்ளது. உங்களின் சேமிக்கும் ஆற்றல் உயரும், இதனால் பொருளாதார பாதுகாப்பு காணப்படும்.

# ஓமந்தைப் பொலிஸார் காணிக்குள் நுழையத் தடை: வவுனியா பிரதேச செயலர் நேற்று அதிரடி உத்தரவு!


(கி.வசந்தன்)

வவுனியா, ஓமந்தைப் பொலிஸார் பொலிஸ் நிலையம் அருகில் உள்ள தனிநபருக்குச் சொந்தமான காணியை ஆக்கிரமித்து வருகின்றனர் எனக் குற்றம் சாட்டப்பட்ட நிலையில் அந்தக் காணிக்குள் நுழைய பொலிஸாருக்கு வவுனியா பிரதேச செயலாளரால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, ஓமந்தைப் பொலிஸ் நிலையத்திற்கு என பிறிதொரு இடத்தில் காணி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான காணியில் தற் போது நிலை கொண்டுள்ளனர். அந்தக் காணிக்கு அருகில் இருந்த தனிநபர் ஒருவரின் காணியையும் அபகரித்துள்ள பொலிஸார் அதனைத் துப்புரவு செய்து கையகப்படுத்துவதற்கான முயற்சுகளில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் அரசியல்வாதிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்ட நிலையில் வவுனியா பிரதேச செயலகத்தில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தக் காணியைப் பொலிஸார் கைய கப்படுத்த முடியாது எனவும், அதற்குள் செல்லக் கூடாது எனவும் தீர்மானிக் கப்பட்டிருந்தது.

அதனையும் மீறி நேற்றைய தினம் மும் பொலிஸார் அந்தக் காணிக்குள் சென்று துப்பரவுப் பணிகளில் ஈடுபட்ட போது காணி உரிமையாளர், வவுனியா தெற்கு பிரதேச சபை தவிசாளர் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் வவுனியா தெற்கு பிரதேச சபை உறுப் பினர், தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் மாவட்ட அமைப்பாளர் ஆகியோர் சென்று பொலிஸாருடன் முரண்பட்டிருந்தனர். விடயத்தை அரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோரின் கவனத்திற்கும் கொண்டு வந்திருந்தனர்.




இதனையடுத்து, ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட தீர்மானத்திற்கு அமைய இந்தக் காணிக்குள் ஓமந்தைப் பொலிஸார் நுழைவதற்குத் தடை விதித்து வவுனியா பிரதேச செயலாளர் இ.பிரதாபனால் ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள் ளது.